**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 148/2021**
**நாள் 24/06/2025 செவ்வாய்க்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 2–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – கைலாசம் | த/பெயர் – அய்யாவு நாயக்கர் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – எண் 26, கங்கையம்மன் கோயில் தெரு, வளசரவாக்கம், சென்னை | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. ஏழுமலை, முனுசாமி கிரையம் பெற்றப்பின் தாவா சொத்தை பிரதிவாதிக்கு வாடகைக்கு கொடுத்தார் என்றால் சரிதான். 2009ல் எனக்கு பொதுஅதிகாரம் வழங்கியபிறகும் பிரதிவாதி தான் தரை வாடகைக்கு இருந்து வந்தார் என்றால் சரிதான். பிரதிவாதி தாவா சொத்தில் பவானி இன்ங்சினியரிங் என்ற பெயரில் தொழில் செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால், தாவா சொத்தில் ஒரு தார் செட் இருந்தது. எனது மனைவிக்கு வா.த.சா ஆ 5 ன் மூலம் கிரையம் எழுதி கொடுத்த போதும் பிரதிவாதி தான் தாவா சொத்தில் வாடகைக்கு இருந்தார். வா.த.சா ஆ 5 ஏழுதி கொடுக்கும் போது நான் சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றும் பிரதிவாதி தான் வாடகைக்கு அனுபவத்தில் இருந்தார் என்றால் சரிதான். எனது சொத்தை எனது மனைவிக்கு கிரையம் செய்து கொடுத்தபோது அதன் சுவாதீணத்தை ஒப்படைக்கவில்லை என்றும், என்னென்றால் பிரதிவாதி மேற்படி

சொத்தின் அனுபவத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. எனது கிரைய பத்திரத்தில் பிரதிவாதி வாடகையில் இருக்கும் விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால், வாடகையை எனது மனைவியை பெற்றுக்கொள்ளுமாறு கூறினேன்.

2. நான் பிரதிவாதிக்கு தாவா சொத்தை வாடகைக்கு விட்டதற்கோ, நான் கிரையம் செய்த பிறகு எனது மனைவி பிரதிவாதியிடம் இருந்து வாடகை பெற்றதற்கோ நான் பிரதிவாதியிடம் இருந்து வாடகை பெற்றதற்கோ ஒப்பந்தமோ ரசீதோ பெறவில்லை என்றால் சரிதான். எனது மனைவி வாதிக்கு தாவா சொத்தை கிரையம் செய்யும் வரை பிரதிவாதியிடம் இருந்து தரை வாடகை பெற்றுவந்தார் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி பணம் கொடுப்பார் அதை என் மனைவி பெற்றுக்கொள்வார். முனுசாமியின் மச்சினிச்சியை எனது மகனுக்கு திருமணம் செய்து வைத்தேன் என்றால் சரிதான். ஏழுமலையின் மகளை பிரதிவாதியின் மகனுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதே போல் பிரதிவாதியின் மகளை ஏழுமலையின் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வாதியின் கணவர் ராஜா என்பவர் எனது வளர்ப்பு மகன் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்தவர். வாதியின் கணவர் ராஜாவை சுமார் 20 முதல் 25 வருடமாக தெரியும். வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் நான் இல்லை என்றும் எனது மனைவிக்கு சுவாதீணம் ஒப்படைக்காமல் கிரையம் செய்ததது செல்லாது என்றால் சரியல்ல.

3. எனது மனைவி கொடுத்த கிரைய தொகையை மேற்படி முனுசாமி, ஏழுமலைக்கு கொடுத்துவிட்டேன்.

மேற்படி தொகையை முனுசாமி, ஏழுமலைக்கு கொடுத்ததற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த கிரைய தொகையையும் முனுசாமி, ஏழுமலைக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் சரவணன் அவருக்கு முனுசாமி சகலை உறவு என்றால் சரிதான். மேற்படி முனுசாமி, ஏழுமலை என்னிடம் ரூபாய் 2,00,000/- அடமான கடன் கேட்டனர் என்றும் அவர்களை அழைத்து சென்று மோசடியாக ஏமாற்றி விருகம்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி கேள்விக்கு வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபனையுடம் பதிவு செய்யப்படுகிறது. விருகம்பாக்கத்தில் மேற்படி பொது அதிகார பத்திரத்தை பதிவு செய்யவேண்டிய அவசியம் எவ்வாறு எற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. வா.த.சா ஆ 4 பத்திரத்தில் என்ன காரணத்திற்காக விருகம்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய விரும்புகிறோம் என்பது குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் இருக்கும் பகுதி வளசரவாக்கும். அது விருகம்பாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். நான் எனது மனைவி பெயரில் மோசடியாக வா.த.சா ஆ 5 கிரைய பத்திரம் எழுதி வைத்தேன் என்றால் சரியல்ல. வாதி பிரியா எனது மனைவியிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். பொது அதிகார பத்திரத்தில் வாதியின் கணவர் ராஜா ஒரு சாட்சி ஆவார். அதே போல் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திர்த்திலும் ராஜா ஒரு சாட்சி ஆவார்.

5. நானும் எனது மனைவியும் தாவா சொத்தை மோசடி செய்வதற்காகவே பொதுஅதிகார பத்திரம், கிரைய பத்திரம் தாயார் செய்தோம் என்றால் சரியல்ல. வா.த.சா ஆ 4, 5, 7 பத்திரங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. ஜூன் 2011 வரை ஏழுமலை, முனுசாமி அடமான கடனுக்கான வட்டி செலுத்திவந்தனர் என்றால் சரியல்ல. அதன் பிறகு அசல் தொகையை கொடுத்து அடமானத்தை ரத்து செய்து கொடுக்க கேட்டார்கள் என்றும் நான் 2, 3 மாதத்தில் ரத்து செய்து கொடுப்பதாக கூறினேன் என்றால் சரியல்ல. இறுதியாக மார்ச் 2018ல் ஏழுமலை, முனுசாமி அசல் தொகை ரூபாய் 2,00,000/– கொடுத்துவிட்டு அசல் கிரைய பத்திரத்தை கேட்டார்கள் என்றும் நான் திருப்பி தரவில்லை என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு கிரையம் செய்த பிறகு பிரதிவாதியை தாவா சொத்தில் இருந்து காலி செய்ய கோரி புகார் மனுவோ, வழக்கறிஞர் அறிவிப்போ கொடுக்கவில்லை ஏன்னென்றால் அவர் வாடகை கொடுத்துவந்தார். ஏழுமலை, முனுசாமி எனது மனைவிக்கு 14.09.2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் 22.09.2021ல் பதில் அறிவிப்பு அனுப்பினேன். அந்த பதில் அறிவிப்பில் முனுசாமி, ஏழுமலைக்கு கிரைய தொகை கொடுத்ததை சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. வாதி பிரியா என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இடத்தை காலி செய்ய கோரி தாக்கல் செய்துள்ளார். வழக்கு பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் இடத்தை காலி செய்ய கோரி பரிகாரம் கேட்டுள்ளார். வழக்கு சொத்து விவரத்தில் மின்சார இணைப்பு, அதில் நடக்கும் தொழில் குறித்தோ, கல் கட்டிடம் குறித்தோ விவரங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் கல் கட்டிடம் இல்லை.

பிரதிவாதி என்னிடமோ, என் மனைவியிடமோ வாடகைக்கு இருப்பதாகவும் வாடகை கொடுத்துவருவதாகவும் எந்த ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை என்றால் ஒப்பந்தம் போடவில்லை ஆனால் வாடகை கொடுத்துவந்தார். வா.த.சா ஆ 4,5,7 பத்திரங்கள் அடிப்படையில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி முனுசாமி, ஏழுமலையிடம் வாடகை ஒப்பந்தம் செய்து அதன் அடிப்படையில் நாளைய தேதிவரை வாடகைக்கு இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் பொது அதிகார பத்திரத்திற்கு முன்பு ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்தை நானும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. பிரதிவாதி நெல்காஸ்ட் கம்பெனிக்கு இயந்திர பாகங்கள் செய்து அனுப்புகிறார் என்றால் அது பற்றி தெரியாது. வா.த.சா ஆ 4, 5, 7 பத்திரங்களின் சொத்து விவரத்தில் காலி மனை என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான், எனது மனைவி, வாதியின் கணவர் ராஜா ஆகியோர் சேர்ந்து ஆரம்பத்தில் இருந்தே வழக்கு சொத்தை மோசடி செய்யவேண்டும் என்ற என்னெத்தில் செயல்பட்டு வா.த.சா ஆ 4,5,7 ஆகிய ஆவணங்களை மோசடியாக செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் ஏழுமலை பெயரில் மின்சார இணைப்பு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சட்டப்படி செல்லதக்கதல்ல என்றாலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**